முருகப்பெருமான் துணை

**மகான் சிறுதொண்ட நாயனார் அருளிய அருளாசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

25.07.2022, திங்கட்கிழமை

1. தரும வடிவே அரங்காவாழ்க
தவப்பொருளே அவதாரமாகி
ஆறுமுகனார் படைப்பாக வந்த
அண்ணலே தேசிகா வாழ்க
2. வாழ்கயெனக் கூறி இனிதே
வழங்குவேன் அருளாசி தனை
தாழ்விலா சுபகிருது நள்ளி திங்கள்
தக்கபடி நவ திகதி சோம வாரம்
(சுபகிருது வருடம் ஆடி மாதம் 09 நாள், 25.07.2022 திங்கட்கிழமை)
3. வாரமதில் சிறுதொண்ட நாயனாரும்
வழங்குவேன் உலகோர் நலமுற
வாராந்திர தொடர் தருமமும்
வல்லமைதரும் ஞானிகள் பூசையும்
4. பூசையும் தடைபடா செய்ய
புண்ணிய பலமுடன் மக்களுக்கு
நேசமுள்ள நீதிமான்களின்
நெருக்கம் தொடர்பு ஆசி கூடி
5. கூடியே நல்ல நடத்தைகளும்
குருபக்தி விசுவாசம் தானும்
கூடியே மனபலம் திடம்
குவலயம் தனக்கு வந்தநோக்கம்
6. நோக்கம் யாவும் பூர்த்திபட
நிலவுலகில் செயல்கள் சிறந்து
தேக்கமின்றி வெற்றிகளோடு
தேவைக்கு மேலான வரவும் அமைதியும்
7. அமைதிபட தரும சேவையும்
ஆணவம் பிறமாயை பற்றா
அமைதிபட யாவும் கைகூடி
ஆபத்து இடைகண்டமிலா வாழ்வாக
8. ஆகவே வாழ்க்கை சிறந்து
அனுதினமும் வணங்குகின்ற
மிகையான வழிபாடாகப் பெருகி
மேலான தருமமாக சிறந்து
9. சிறந்துமே கலிவாழ் மக்களுக்கு
சித்தராக அரங்கன் தரும்
அருந்தவ உபதேசங்கள் எல்லாம்
ஆற்றலும் நல்ல தேற்றமும் ஆகி

10, ஆகியே ஞானவான்கள் எனும்
அற்புத படைப்புக்கு மாறி
அகிலம் காக்கும் படைகளாக
ஆறுமுகனார் ஆசி அருள்

11. அருள்பெற்றவர்களாகத் தேறி
ஆளுமைதனை ஞான வழி
வருமுலகில் மாற்றும் சக்திபெறுவர்
வழங்கிய அருளாசி முற்றே

–சுபம்–